**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022.**
**வழக்கு சாட்சி – அ.சா. 4.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. காமாட்சி. | ஜாதி | |
| தந்தை பெயர் | மாணிக்கம். | தொழில் | விவசாயம். |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 66/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, அல்லிநகரத்தில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என் மருமகள். அ.சா.2 என் மகன். அ.சா.3 என் மனைவி ஆவார். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். நாங்கள் நடக்கும் பாதையை மறைத்தபடி சுவர் கட்டியிருந்தார்கள். அதை எதிரிகளிடம் அகற்றும்படிக் கேட்டபோது, அதை எதிரிகள் அகற்றவில்லை. அதனால் நாங்கள் நகராட்சியில் இதுபற்றித் தெரிவித்தோம். கடந்த 20.04.2018 ஆம் தேதியன்று, நகராட்சியிலிருந்து வந்து, மேற்படி சுவரை அகற்றிவிட்டார்கள். அன்றைய தினம் இரவு 08.00 மணிக்கு நானும், என் மகனும் வீட்டில் இல்லாத சமயத்தில், எதிரி மருதுபாண்டி அரிவாளாலும், எதிரி குருவம்மாள் அரிவாள்மனையையும் எடுத்துவந்து, எனது மனைவியையும், எனது மருமகளையும் பார்த்து, உங்களைக் கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டி, கல்லால் எறிந்ததில், எங்கள் வீட்டில் கதவில் கல் பட்டு, கதவு உடைந்துவிட்டது. மேற்படி சம்பவம் குறித்து, நானும், எனது மகனும் இரவு 08.30 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது, சம்பவம் பற்றித் தெரிவித்தார்கள். அதன்பின்னர், நாங்கள் இருவர் மற்றும் என் மனைவி, என் மருமகள் ஆகியோர்கள் சென்று காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் குறித்து எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால், எனது மனைவி மற்றும் எனது மருமகள் கூறினார்கள். போன் மூலமாக தகவல் தெரிவித்தார்களா? என்றால், இல்லை, நான் வீட்டிற்கு வந்த பின்னர் தகவல் தெரிவித்தார்கள். நான் வருவதற்கு முன்பு, எனது மகன் வீட்டிற்கு வந்துவிட்டாரா? என்றால், இல்லை. நான் வந்தபின்னர்தான் என் மகன் வீட்டிற்கு வந்தார். சம்பவம் நடந்தபோது, அக்கம் பக்கத்தினர் யாரும் விலக்கிவிட்டார்களா? என்றால் இல்லை. எதிரிகளுக்கும், எங்களுக்கும் இடையே இருந்த நிலப் பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு, எதிரிகள்மீது பொய்யாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. என்ன மாதிரியான கல்லைக் கொண்டு, எதிரிகள் எங்களது வீட்டுக் கதவை சேதப்படுத்தினார்கள் என்றால், கல்லைக் கொண்டு எறிந்தார்கள். நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில், சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் இருவரும், என் மனைவியையும், என் மருமகளையும் பார்த்து, அசிங்கமாகப் பேசி, கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.16 20:52:11 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**